## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

முன்னிலை : திருமதி.P.கணேசன், பி.ஏ., பி.எல்.,டி.எல்.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண் 24/2014**

ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸ்,
1வது செட் சிட்கோ,
மதுரை ரோடு, தேனி
அதன் பார்ட்னர்கள்
1. என்.கே.ராஜகோபாலன்
2. கே.ஆர்.ராஜ்குமார்
3. கே.ஆர்.சரவணக்குமார் .... வாதிகள்

/ எதிர் /

1. எஸ்.திலகா
2. ஸ்ரீனிவாசகம்
   எஸ்.திலகா அவர்களின் பவர்ஏஜெண்ட்
3. என்.கே.சீனிவாசன்

.... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பாக 01.07.2023ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும் வாதிகள் அழைத்தும் ஆஜரில்லாததாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதிகளின் வருகையின்மை காரணமாக இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**தீர்ப்புரை**

தேனி மதுரை ரோட்டில் அமைந்துள்ள சிட்கோ பதிவு எண் 76/90ல் உள்ள ஸ்ரீவீனஸ் டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனத்தில் வாதிகள் பங்குதாரர்கள் என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், அதன் தொடர்ச்சியாக 1 முதல் பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள வாதிகளின் அமைதியான சுவாதீனத்திற்கு எந்தவித இடையூறும் செய்யக் கூடாதென்று உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித பந்தக பராதீனங்கள் செய்யக் கூடாதென்று நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவு தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

The plaintiff is called absent. No representation for him. So, the suit is dismissed for non-prosecution.

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) P.கணேசன்
1.7.23
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
பெரியகுளம்.

கூடுதல் மாவட்ட மற்றும்
அமர்வு நீதிமன்றம்,
அ.வ. எண் 24/2014
தீர்ப்புரை நாள் 01.07.2023